**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074736

C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **03/2024** Date: நாள் **05.03.2024**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **01.03.2024** Date to : நாள் வரை **04.03.2024**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **05.03.2024** Time : நேரம் **1600 Hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **1730 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **40 Kms West**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **Social Welfare Office, BDO Office Campus, Chengam Tk, Tiruvannamalai Dt.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.K.Jaya**
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **W/o.Kesavan**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-24**
(d) Nationality : நாட்டினம் **Indian**
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Agriculture**
(g) Address : முகவரி **No.553, Irullar Kalani, Karungalipadipatti Village, Puliyampatti Post, Chengam Tk, Tiruvannamalai District.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tmt.Jeeva, Social Welfare Officer, BDO Office Campus, Chengam Tk, Tiruvannamalai Dt.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : ------
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

------

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 05.03.2024 ஆம் தேதி மாலை 16.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் K.ஜெயா வயது- 24 ,க/பெ.கேசவன்,நெ.553, இருளர் காலனி, கருங்காலிப்பாடிபட்டி கிராமம், புளியம்பட்டி அஞ்சல்,செங்கம் தாலுக்கா,திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர். K.ஜெயா வயது- 24, க/பெ.கேசவன், நெ.553, இருளர் காலனி, கருங்காலிப்பாடிபட்டி கிராமம், புளியம்பட்டி அஞ்சல், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர்.உயர்திரு. காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,திருவண்ணாமலை மாவட்டம். ஐயா, நான் செங்கம் தாலுக்கா கருங்காலிப்பாடிபட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Jaya. 5/3/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 05-03-2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05. 03. 2024, 1800 hrs

Name: பெயர் S.VELMURUGAN
Rank: நிலை DSP No. எண் VSAC
TIRUVANNAMALAI

கடந்த 2018 -ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. எனது கணவர் கேசவன் மற்றும் எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி இருவருக்கும் பூர்விகமான சொத்து உள்ள கருங்காலிப்பாடிபட்டியில் உள்ள சுமார் 1 ஏக்கரில் விவசாயம் செய்து அதில் வரும் வருமானத்தில் மட்டும் ஜீவனம் செய்து வருகிறோம். நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நானும் எனது கணவருடன் சேர்ந்து விவசாயத்திற்கு உதவியாக இருந்து வருகிறேன். எங்களுக்கு சிந்தனா என்ற நான்கு வயது மகளும் , கிருத்திகா என்ற இரண்டரை வயது மகளும் உள்ளனர். எனக்கு இரண்டாவது பெண் குழந்தை திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் பிறந்த போது குடும்பக்கட்டுப்பாடு ஆப்ரேஷன் செய்துகொண்டேன் அப்போது திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்-II ல் பதிவு செய்யுமாறு அறிவுரை வழங்கினார்கள். அதன்படி எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி மற்றும் எனது கணவர் கேசவன் இருவரும் இ-சேவை மையத்திற்கு சென்று கடந்த 06.06.2022-ம் தேதி சமூக நலத்துறையால் வழங்கப்படும் முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் -II, விண்ணப்ப எண்.2022/0402/06/000227 படி கூடுதல் இணைப்பாக எனது மற்றும் என் கணவர் பள்ளி மாற்றுச்சான்றிதழ், சாதி சான்றிதழ், திருமண பத்திரிக்கை , குழந்தை பிறப்பு சான்றிதழ், ஆண் குழந்தை இன்மைக்கான சான்றிதழ், குடும்ப போட்டோ ஆகியவற்றை கொண்டு பதிவு செய்து ஒப்புகை சீட்டும் பெற்றிருந்தோம். இது சம்மந்தமாக மனுவை பலமுறை செங்கம் BDO அலுவலகத்தில் உள்ள சமூக நலத் துறையில் நான் சென்று விசாரித்த போது விசாரணைக்கு கிராமத்திற்கு வருவார்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். திடீரென்று இது சம்மந்தமாக கடந்த வெள்ளிக்கிழமை மதியம் செங்கம் சமூக நலத்துறையில் இருந்து பேசுவதாக சொல்லி எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு போன் செய்து மேற்படி திட்டம் சம்மந்தமாக ஆன்லைனில் பதிவு செய்த அனைத்து ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு 04.03.2024-ம் தேதி செங்கம் BDO அலுவலகத்தில் உள்ள சமூக நல பிரிவிற்கு ஜெயா அவர்களை அழைத்து வருமாறு சொன்னதின் பேரில் நானும் மற்றும் எனது கணவரும் செங்கம் BDO அலுவலகத்தில் உள்ள சமூக நலத்துறைக்கு சென்று அங்கு உள்ள சமூக நலத்துறை அதிகாரி திருமதி.ஜீவா என்பவரை சந்தித்து முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்-II கீழ் நாங்கள் விண்ணப்பம் செய்த மனுவை குறித்தும் நான் கேட்ட போது இவ்வளவு நாட்கள் எங்கே சென்றீர்கள் என்றும், ஏன் என்னை பார்க்கவில்லை என்று சமூக நல அதிகாரி திருமதி.ஜீவா அவர்கள் கேட்டார் . நான் அதற்கு மேடம் நான் பல முறை வந்து விசாரித்தேன் கிராமத்திற்கு விசாரணைக்கு வருவார்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள் என்று நான் சொன்னதற்கு திருமதி. ஜீவா அவர்கள் சரி விடு இப்போது கூட நான் தான் உங்க மாமனாருக்கு போன் செய்ய சொன்னேன் என்று சொன்னார். பின்னர் என்னிடம் இருந்த எல்லா ஆவண நகல் மற்றும் புகைப்படங்களை பெற்றுக்கொண்டு அலுவலகத்தில் இருந்த இரண்டு கோப்புகளில் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு ரூ.50,000 பணத்திற்கான பத்திரத்தை பெற்று தர பரிந்துரை செய்ய வேண்டும் என்றால் இலஞ்சப்பணமாக ரூ.3,000/- தர வேண்டும் என்றார். அதற்கு நாங்கள் இது இலவச திட்டம்தானே ஏன் இலஞ்சப்பணம் தர வேண்டும் என கேட்டேன். அவ்வளவு இலஞ்சப்பணம் தரும் அளவுக்கு என்னிடம் வசதியும் இல்லை என்று கூறினேன். பின்னர் அந்த அதிகாரி நாங்க போன் பண்ண அப்புறம் தான நீங்க வந்தீங்க இதுக்கு முன்னாடி என்ன பண்ணிட்டு இருந்தீங்க இதமட்டும் நல்லா கேளுங்க என்று கூறி, அலுவலக செலவிற்கு இலஞ்சமாக ரூ.3,000/- கொடுங்க இல்லையென்றால் மேற்படி திட்டத்தில் இருந்து உங்கள் பெயரை நீக்கி விடுவேன் என்று கராராக கூறி என்னை பணத்துடன் வா என்று சொல்லி அனுப்பிவிட்டார். இதனால் நான் யோசித்து, எனக்கு இலஞ்சப்பணம் ரூ.3,000/- கொடுக்க விருப்பம் இல்லாததால் என்னிடம் இலஞ்சப்பணம் கேட்ட திருமதி.ஜீவா சமூக நல அலுவலர் செங்கம் அவர்கள் மீது

சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும்படி எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினியில் தட்டச்சு செய்து புகார்மனு அளிக்கிறேன். என்னிடம் இலஞ்சப்பணம் கேட்ட அதிகாரிமீது நடவடிக்கை எடுக்குமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd XXXXXX)

Sir,

Received the complaint on 05.03.2024 at 16.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 05.03.2024 at 17.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.03/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 05.03.2024. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

05.03.2024.

(S. VELMURUGAN
Deputy Superintendent
of Police
Vigilance and Anti-Corruption
Tiruvannamalai)